# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1988 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, பொதுமக்கள் பாதுகாப்பு (திருத்தச்) சட்டம்

---

*[1988 ஜூலை மாதம் 27 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1988, யூலை மாதம் 29 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

*விலை : சதம் 30* — *தபாற் செலவு : சதம் 75*

## 1988 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, பொதுமக்கள் பாதுகாப்பு (திருத்தச்) சட்டம்

[1988, ஜூலை மாதம் 27 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ—ஓ. 34/87

### பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப்பெயர்.

1. இச்சட்டம் 1988 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, பொதுமக்கள் பாதுகாப்பு (திருத்த)ச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

40 ஆம் அத்தியாயத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.

2. பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(2அ) (அ) இரண்டாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட பிரகடனமொன்று முடிவுறுகையில் அல்லது அதற்குமுன்பு அப்பிரிவின்கீழ் மேலும் ஒரு பிரகடனம் செய்யப்படுமிடத்து, அத்தகைய மேலும் ஒரு பிரகடனம் நடைமுறைக்கு வருவதற்கு நேர்முற்போந்த நாளன்று வலுவிலுள்ளதான அல்லது வலுவிலுள்ளதாகக் கருதப்படுவதான—

(i) 5 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும்; அத்துடன்

(ii) அத்தகைய ஏதாவது ஒழுங்குவிதியின் கீழ் ஆக்கப்படும் ஒவ்வொரு கட்டளையும் ஒழுங்குவிதியும்;

அத்தகைய மேலும் ஒரு பிரகடனம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்தும் அத்தேதிக்குப் பின்னரும் வலுவிலிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் :

ஆயின், சனாதிபதியானவர், அத்தகைய மேலும் ஒரு பிரகடனம் நடைமுறைக்கு வருவதற்குமுன்பு எந்நேரத்திலும், கட்டளைமூலம், அத்தகைய மேலும் ஒரு பிரகடனம் நடைமுறைக்கு வருவதன் மேல் அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய ஏதேனும் ஒழுங்குவிதி, கட்டளை அல்லது விதி வலுவிலிருப்பதாகக் கருதப்படுதலாகாது என, அல்லது அத்தகைய கட்டளையில் தரப்பட்டுள்ளவாறான அத்தகைய திருத்தங்களுக்கு அல்லது திரிபுகளுக்கு அமைவாக வலுவிலிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் என வெளிப்படுத்தலாம்.

(ஆ) இப்பிரிவிலுள்ள எதுவும், 2 ஆம் பிரிவின்கீழான பிரகடனம் தொடர்ந்து இருக்கும்போது 5 ஆம் பிரிவின்கீழ் ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்கு, அல்லது வலுவிலுள்ள அல்லது வலுவிலுள்ளதாகக் கருதப்படும் அத்தகைய ஏதேனும் ஒழுங்குவிதியை, கட்டளையை அல்லது விதியைத் திருத்துவதற்கு, வேறுபடுத்துவதற்கு அல்லது இல்லாதொழிப்பதற்கு சனாதிபதிக்குள்ள தத்துவத்தைப் பங்கப்படுத்துவதாதலாகாது.".

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டு திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.